# நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்

## தேர்தல் நடைமுறைக் கைநூல்

### தேர்தல் ஆணையம்

செப்டெம்பர் 06, 2013

உலகளாவிய முறையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின்
தேர்தல்களில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள்

## உள்ளடக்கம்

**1. வழிநடத்தும் கோட்பாடுகள்** ........................... 03

**2. கட்டமைப்பு**

2.1 தேர்தல் ஆணையம் (நா. க. த. அ) .......................... 04

2.2 சகல நாடுகளிலும் ஒரே சீராகக் கடைப்பிடித்தற்காகப் பரிந்துரைக்கப்பட்ட நிர்வாக அமைப்பு. .......................... 05

2.2.1 தேர்தல் மாவட்டம்

2.2.2 தேர்தல் ஆணையம் (நாடு)

தேர்தல் ஆணையாளர் (நாடு)

தலைமை தேர்தல் அலுவலர் (தேர்தல் மாவட்டம்) ............. 06

தலைமை உத்தியோகத்தர்கள் (Presiding Officers) ............. 07

**3 தேர்தல் நாள்** ................................................... 07

**4 முக்கிய கால அட்டவணைகள்** ........................................ 08

**5 தேர்தல் முறை, வாக்களிப்பு, வாக்காளர்** ........................ 09

5.1 வாக்கு

5.2 அதிகபட்ச வாக்குகளின் அடிப்படையிலான வாக்களிப்பு

**6 வாக்காளர்கள்** ...................................... 09

6.1 வாக்காளர் தகுதி

**7 வேட்பாளர்கள்** ...................................... 09

7.1 வேட்பாளர் தகுதி

7.2 வைப்புப் பணம் ...................................... 10

7.3 வேட்பு மனுத் தாக்கல்

7.4 வேட்பு மனு மீளப்பெறல் ................................ 11

7.5 வேட்பு மனு ஏற்பு உறுதிப்படுத்துதல்

7.6 வேட்பாளர் தகுதியின்மை .............................. 11

**8 தேர்தல் நாளைய முன்னேற்பாடுகள்** ……………………… … 12

8.1 தேர்தலுக்குத் தேவையான பொருட்கள் ………………….. 12

9. **வாக்களித்தல்** ………………….. 12

9.1. வாக்களிப்பு நிலையங்கள் …………………. 12

9.2. வாக்குச் சாவடி உபகரணங்கள் …………………. 13

9.3. வாக்குப் பதிவு முறை …………………. 13

9.4. உதவியுடன் வாக்குப் பதிதல் …………………. 15

9.5. வாக்குச்சீட்டின் வடிவமைப்பு …………………. 15

9.6. வாக்குச்சாவடி முகவர்கள் …………………. 16

10. **வாக்குச்சீட்டுக்களை எண்ணுதல்** .................................. 16

11. **பாதுகாப்பு** .................................. 17

12. முறையீடுகளைத் தீர்த்து வைத்தல் …………………. 18

12.1 ஒழுக்க முறை மீறல் …………………. 18

12.2 விதிமுறை மீறலின் பலாபலன்கள் ………………….. 18

12.2.4 பின்னிணைப்பு …………………. 20

12.2.5 ஆள் அடையாளம், வதிவிடம், வயது தீர்மானித்தல் … 21

12.2.6 வாக்களிப்பு நிலையங்களில் வேட்பாளர் பிரசாரம் ……. 21

12.2.7 தேர்தல் ஆணையத்தின் விதி தளர்த்தல் உரிமை ……. 22

12.2.8 தேர்தல் பிணக்குகள். ……………………………… 23

## தேர்தல் நடைமுறைகள்.

தேர்தல் ஒன்றை நடுநிலையாகவும் நேர்மையாகவும் நடாத்துதற்கு வழிகாட்டியாக இக் கைநூல் வரையப்பட்டுள்ளது. **இந்தக் கைநூல் ஒரு சட்ட ஆவணம் ஆகாது.** இது தேர்தல் நடைமுறையை மிகவும் எளிதாகப் புகட்ட எடுத்துக் கொண்ட முயற்சியாகும். இக் கைநூலின் மொழிநடையும் அமைப்பும் முடிந்த வரையில் சட்டச் சொல்லாட்சிகளைத் தவிர்த்துப், பாமர நடையில் அமைப்பதற்கே முழுக்கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இங்குள்ள வாசகங்களின் பொருள் விளக்கத்தில் கருத்து வேறுபாடுகள் இருப்பின் அவற்றைத் தெளிவுபடுத்துவதற்கும் உரிய வழிப்படுத்தலுக்கும் தத்தமது தேர்தல் ஆணையத்தை நாடவேண்டும்.

**தேர்தல் நிர்வாகத்திலுள்ள சகல பகுதிகளையும் உள்ளடக்க முயற்சி எடுத்திருப்பினும் இங்கு விடுபட்ட பகுதிகள் ஏதாவது இருப்பின் அது தொடர்பான பணிப்புரைகளைத், தேவைப்படும் போது நா.க.த.அ தேர்தல் ஆணையத்திடமிருந்து எந்நேரமும் கேட்டுப்பெறலாம் என்பதையும் இங்கு கூறி வைக்க விரும்புகிறோம்.**

……………………………………

## 1. வழிநடத்தும் கொள்கைகள்.

1.1. நா.க.த.அ. அதன் பொதுக் குறிக்கோள்களை நோக்கிய பயணத்தில், உலகெங்கும் பரந்து வாழும் தமிழினத்தின் ஒற்றுமையையும் ஒருமித்த பலத்தையும் பேணி வளர்த்தல்.

1.2. தேர்தலைத் திட்டமிடுவதற்க்கும், நடாத்தி முடிப்பதற்கும், இவை தொடர்பான அனைத்துக் கட்டப் பணிகளுக்கும் பொறுப்பான தனிமனிதர்கள் முற்றிலும் நடுநிலைமையானவர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு முழுதும் வெளிப்படையான சனநாயக முறையில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல்.

1.3. எந்த மட்டத்திலே தீர்மானங்கள் எடுக்கப்படினும் அவை சகல வேட்பாளர்களையும் வாக்காளர்களையும் எச்சந்தர்ப்பத்திலும் நியாயமாகவும், பாகுபாடின்றியும் சமமாக நடத்துவதைப் பிரதிபலிப்பதாகவும் அமையவேண்டும். மேலும், பிரபலமான சட்டப் பழமொழியின் படி **“நீதி வழங்கப்படுவது மட்டுமன்றி அது வழங்கப்பட்டதாகத் தோற்றவும் வேண்டும்.”**

1.4. சனநாயகச் சூழலில் கடைப்பிடிக்கப்படும் உலகளாவிய விழுமியங்களை வழுவின்றிக் கடைப்பிடித்தல்.

## 2. கட்டமைப்பு

### 2.1. தேர்தல் ஆணையம் - நா.க.த.அ.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் (நா.க.த.அ) யாப்பின் 1.10.2 பிரிவிற்கேற்ப, ‘‘நா.க.த.அ. அரசவையின் பரிந்துரையுடன் பிரதமர் **மூன்று உறுப்பினரைக் கொண்ட தேர்தல் ஆணையத்தை நிறுவ வேண்டும்.** நா.க.த.அரசாங்கத்தின் எதிர்வரும் தேர்தல்களை நடத்துதற்குத் தேர்தல் ஆணையம் பொறுப்பாக இருக்கும். தேர்தல் ஆணைய உறுப்பினர்கள் நா.க.த.அரசாங்கத்தின் அரசவையிலோ, மதியுரைக் குழவிலோ அல்லது வேறெந்த நா.க.த.அ குழுவிலுமோ உறுப்பினர்களாக இருத்தலாகாது.

.................................................

மேற் கூறப்பட்ட தேர்தல் ஆணையாளர்கள் **நா.க.த. அரசாங்கத்தின் தேர்தல் ஆணையாளர்கள்** என்று குறிப்பிடப்படுவார்கள். இவர்களில் ஒருவர் நா.த.அ. தேர்தல் ஆணையத்தின் தலைவராகப் கடமையாற்றுவார்.

**நா.க.த.அ. தேர்தல் ஆணையாளர்கள், எக்காலத்திலும் பதவி வழியாக அனைத்து நாட்டுத் தேர்தல் ஆணையங்களினதும் அங்கமாகக் கணிக்கப் பெறுவர்**.

- **சிறந்த செயல்முறை உறவுகளைப் பேணும் முகமாகவும், அவை ஒரேமாதிரியாகச் செயற்படுவதை உறுதிப்படுத்தும் முகமாகவும்,** நாட்டுத் தேர்தல் ஆணையத்தினது அனைத்துக் கூட்டங்கள் தொடர்பான தகவல்கள் அனைத்தும் நா.க.த.அ. ஆணையத்துக்கு அறியத்தரப்படவேண்டும்.

- நா.க.த.அ. தேர்தல் ஆணையாளர்களில் குறைந்தது ஒருவராவது நேரில் பிரசன்னமாயோ அன்றி “ஸகைய்ப்” மூலமோ, அல்லது தொலை பேசி மூலமோ கூட்டத்தில் பங்குபற்றுவார்.

- கூட்ட அறிக்கைகள், நா.க..த.அ. தேர்தல் ஆணையத்துக்கு சமா்ப்பிக்கப்பட்டு அவ்வறிக்கைகள் தொடா்பான கருத்துக்கள் காலக் கிரமத்தில் அந்தந்த நாட்டு தோதல் ஆணையங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

### 2.2. அனைத்து நாடுகளிலும் ஒரே மாதிரியாகக் கடைப்பிடிப்பதற்காகப் பரிந்துரைக்கப்பட்ட நிர்வாக அமைப்பு

#### 2.2.1. தேர்தல் மாவட்டடம் / தேர்தல் தொகுதி ( ஓர் உறுப்பினர் அல்லது பல உறுப்பினர்கள் பிரதிநிதித்துவம்)

நா.க.த.அ. தேர்தல் ஆணையத்தால் மாற்றங்கள் அறிவிக்கப்படும் வரை 2010 மே மாதத்தில் நா.க.த.அ தேர்தலுக்காகப் பல்வேறு நாடுகளிலும் குறித்துக் காட்டப்பட்ட தேர்தல் மாவட்டங்களின் அடிப்படையிலேயே தொடர்ந்து நா.க.த.அ தேர்தல்கள் நடைபெறும்.

அந்தந்த நாட்டு நிர்வாக வசதிக்காக பிரிக்கப்பட்டுள்ள பிராந்தியங்களை அடிப்படையாகக் கொண்டே நா.க.த.அ அரசவைத் தேர்தலுக்கும் தேர்தல் பிராந்தியங்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. தேர்தல் பிராந்தியங்கள் தேர்தல் மாவட்டங்களாக அல்லது தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அனைத்து நாடுகளிலும் இனங்காணப்பட்ட தேர்தல் தொகுதிகள் யாவற்றிலும் நா.க.த. அரசாங்கத்தின் அரசவைப் பிரதிநிதிகள் தேர்வுக்கு ஒரே மாதிரியான தேர்தல் விதிமுறைகள் கடைப் பிடிக்கப்படும்.

---

#### 2.2.2 தேர்தல் ஆணையம் (நாடு)

#### தேர்தல் ஆணையாளர் (நாடு) (Election Commissioner)

நா.க.த.அ தேர்தல் ஆணையத்தினால், ஒவ்வொரு நாட்டிலுள்ள சமூக அமைப்புக்களின் பெருமளவிலான ஒத்துழைப்புடனும் பங்களிப்புடனும் **தேர்தல் ஆணையாளர்** ஒருவர் நியமனம் பெறுவார். குறித்த நாட்டு **தேர்தல் பொறுப்பு அதிகாரியாக** நாட்டின் தேர்தல் நிர்வாகப் பொறுப்பு அனைத்தையும் அவர் பொறுப்பேற்பார்.

தேர்தல் ஆணையாளர் (நாடு), நா.க.த.அ தேர்தல் ஆணையத்துடன் இணைந்து, **ஐவருக்குக் குறையாத பிரதித் தேர்தல் ஆணையாளர்களையும் உதவித் தேர்தல் ஆணையாளர்களையும்** உறுப்பினர்களாகக் கொண்ட ஓர் தேர்தல் ஆணையத்தை (நாடு), அவர் தலைமையில் உருவாக்குவார். தேர்தல் ஆணையாளருடன் (நாடு), இவர்கள் இணைந்து தேர்தல் நடைமுறையின் சகல கட்டங்களிலும் திட்டமிடல், நிறைவேற்றல், ஆகிய பொறுப்புக்களை பகிர்ந்து கொள்வதுடன் மேற் கூறப்படும் பணிகளிலும் அனுசரணையாக இருப்பார்கள்.

---

**தேர்தல் நிர்வாகம்**

- பொதுமக்களுக்கு தகவல் அளிக்கும் ஊடகங்களைக் நெறிப்படுத்தல்.
- தகுதியை நுண்ணாய்ந்து வேட்பு மனுக்களைக் கையேற்றல்.

  குறிப்பிட்ட ஒரு தேர்தற் தொகுதிக்கு வேட்பாளர் மனு கிடைக்கப் பெறாத சந்தர்ப்பத்தில், தொகுதிக்கு வெளியே ஆனால் குறித்த பிராந்தியத்தினுள் வசிக்கும் வேட்பாளர்களின் மனு ஏற்றுக் கொள்ளும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு உண்டு. குறிப்பிட்ட பிராந்தியத்தினுள்ளிருந்தும் வேட்பாளர் மனு கிடைக்கப் பெறாத சந்தர்ப்பத்தில் நாட்டின் எப்பகுதியிலிருந்தும் வேட்பாளர் மனு ஏற்றுக் கொள்ளும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு (நாடு) உண்டு.

- வாக்குச் சாவடிகளை அமைத்து அவற்றையும் அவை தொடர்பான அனைத்துக் கருமங்களையும் இயக்குவதில் அலுவலர்களை ஈடுபடுத்துதல்.
- ஓவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் பொருத்தமான **வாக்குச் சீட்டை வடிவமைத்தல்.**
- வாக்களிப்பு முறை எவ்வாறாயினும், வாக்களிப்பிற்கு முன்னும் பின்னும் **வாக்குச் சீட்டுக்களின் பாதுகாப்பிற்கு பொறுப்பேற்றல்.**
- குறித்த நாட்டுத் தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்பட்ட **வாக்குகள் எண்ணும் அதிகாரியின் மேற்பார்வையில் குறித்த தேர்தல் பணியாளர்களின் உதவியுடன் வாக்குக்களை எண்ணுதல்.**

---

**தலைமைத் தேர்தல் அலுவலர்** (Chief Elections Officer)

தேர்தல் ஆணையாளரைத் தலைவராகக்கொண்ட தேர்தல் ஆணையம் நாட்டிலுள்ள ஓவ்வொரு தேர்தல் **மாவட்டத்திற்கும் தலைமைத் தேர்தல் அலுவலர்** ஒருவரை நியமிக்கும்.

ஓவ்வொரு மாவட்டத்திலும் தேர்தல் ஆணையத்தாலேயே நியமிக்கப்படும் இரண்டு அல்லது அதற்கும் அதிகமான அலுவலர்கள் தலைமைத் தேர்தல் அலுவலருக்கு உதவியாக அமர்த்தப்படுவர்.

**தலைமை உத்தியோகத்தர்கள்** (Presiding Officers)

தேர்தல் ஆணையம், வாக்குச் சாவடிகளைப் பொறுப்பேற்கத் **தலைமை உத்தியோகத்தர்களைத்** தேர்தல் ஆணையம் அமர்த்திக்கொள்ளும்.

குறித்த வாக்குச்சாவடி வாக்காளர்களின் உத்தேச வரவு எண்ணிக்கையின் அடிப்படையில் 3 அல்லது 4 அல்லது அதற்கும் அதிகமான **வாக்குப் பதிவு உத்தியோகத்தர்களை** தலைமை உத்தியோகத்தருக்கு அனுசரணையாகத் தேர்தல் ஆணையம் அமர்த்திக் கொள்ளும்

வாக்குச்சாவடி, தலைமை உத்தியோகத்தரின் ஒட்டுமொத்தப் பொறுப்பில் இருந்தாலும் சுமுகமான வாக்குப் பதிவை உறுதிப்படுத்துவதற்கு, வாக்குப் பதிவு உத்தியோகத்தர்களுக்கு, வெவ்வேறு பொறுப்புக்களைத், தலைமை உத்தியோகத்தர், தனது விரிப்புரிமைப் பிரகாரம் பகிர்ந்து அளிக்கலாம்.

---

## 3. தேர்தல் நாள் (Election Date)

**தேர்தல் நாளை முடிவு செய்யும் பொறுப்பு நா.க.த.அ தேர்தல் ஆணையத்தைச் சாந்தேயிருக்கும்**. அனைத்து நாடுகளிலும் ஒரே நாளில் தேர்தல் நடாத்துவதற்கு நா.க.த.அ. தேர்தல் ஆணையம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். அதே வேளையில், ஒரு நாட்டுக்குள் அனைத்துத் தேர்தல் மாவட்டங்களிலும் ஒரே நாளில் தேர்தல் நடத்துவதை முடிந்தவரை உறுதிப்படுத்திக் கொள்ளவே செய்யும்.

---

## 4. முக்கிய கால அட்டவணை (Relevant Time Frames)

**தேர்தல் நாள்:** நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைப் பிரதிநிதிகளுக்கான பொதுத் தேர்தல் நாளை நா.க.த.அ தேர்தல் ஆணையம், **பிரதமருடன் கலந்தாலோசித்துத்** தீர்மானிக்கும்.

**வேட்பாளர் மனு ஏற்றுக் கொள்ளும் இறுதி நாள்:** வேட்பாளர் மனு ஏற்கும் இறுதி நாள் நா.க.த.அ தேர்தல் ஆணைத்தால் தீர்மானிக்கப்படும். அந்நாள், உலகளாவிய முறையில் ஒவ்வொரு நாட்டுத் தேர்தல் ஆணையங்களாலும் பின்பற்றப்படும்.

**வேட்பாளர் மனு தாக்கல் செய்தவர்கள் அதனை மீளப் பெறுவதற்கான இறுதிநாள்:** வேட்பாளர் மனு தாக்கல் செய்தவர்கள் அதனை மீளப் பெறுவதற்கான இறுதிநாள், வேட்பு மனு ஏற்கப்படும் **இறுதி நாளிலிருந்து இரணடு நாட்களாகும்.**

---

## 5. தேர்தல் முறை, வாக்களித்தல், வாக்காளர்கள்

### தேர்தல் முறை

அனைத்து முறைகளையும் விபரிக்க எத்தனிப்பதாகக் கொள்ளாது, பொளிப்பாகத், தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்தல் முறையானது ஓர் மக்களாட்சி முயற்சியாகத், தன்மையிலும் அளவிலும் எத்தகைய பிரதிநிதித்துவத்தைத் தாங்கியுள்ளது என்பதைப் பிரதிபலிப்பதாகும். பாராளுமன்றத் தேரதல்களில் கையாளப்படும் முறையானது பொதுவாக எங்குள்ளவர்களை, எவர் பிரதிநிதித்துவப் படுத்துகிறார் என்பதைத் தீர்மானிப்பதாகும். ஓர் நாட்டின் எல்லைகளுக்குள்ளேயே சம்பந்தப்பட்ட நிறுவனத்தையும் தேர்தல் தொகுதியின் அளவையும் (நாடளாவியதாயிருப்பது முதல் சிறு எல்லைகளைக் கொண்டதாயும்) பொறுத்துப் பலதரப்பட்ட தேர்தல் முறைகள் கையாளப்படலாம். சனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், நகரசபைத் தேர்தல், கல்விச்சபைத் தேர்தல் ஆகியவை உதாரணங்களாக அமையும்.

### 5.1. நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பொதுத் தேர்தலில் வாக்குரிமை

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் தேர்தலுக்காக, ஈழத் தமிழ் வாக்காளர் ஒருவர், பொதுவாக, அவரவர் வதிவிடத்தின் அடிப்படையிலான குறிப்பிட்ட ஒரு தொகுதியில் மட்டுமே தங்கள் ஒற்றை வாக்குகளைப் பதிவு செய்யும் தகமை உடையவராவர்.

இருப்பினும், பல அங்கத்துவத் தேர்தல் தொகுதிகளில் மேலே விவரித்திருப்பது போல் வேறுபாடுகள் காணப்படலாம்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் எதிர்வரும் தேர்தலில், தேர்தல் தொகுதிகள் **தனி அங்கத்தவர் தொகுதியாகவோ** அல்லது **பல அங்கத்தவர் தொகுதியாகவோ** அமையலாம். பொதுவாக, அதிக பட்ச வாக்குகளைப் பெற்றவரே வெற்றியாளராவார்.

இருப்பினும், **பல அங்கத்தவர் தொகுதிகளில் வெற்றியாளர்களைத் தீர்மானிக்கும் கிரமங்கள் வேறுபடலாம்.** நாட்டு நிலைமைக்கேற்ப, உரிய கிரமத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அந்தந்த நாட்டின் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

### 5.2. அதிக பட்ச வாக்குகளின் அடிப்படையிலான வாக்களிப்பு

- **தனி அங்கத்துவத் தொகுதி**

  பெற்றுக் கொண்ட வாக்குகள், மொத்த வாக்குகளின் எண்ணிக்கையில், என்ன நூற்றுவிழுக்காடாக இருந்த போதிலும் அதிக வாக்குகளைப் பெற்றவரை வெற்றியாளராக அறிவிக்கும் முறை.

- **பல அங்கத்துவத் தொகுதி**

  **அங்கத்துவ எண்ணிக்கைக்குச் சமனான வாக்குகளைப் பதிவாக்கும் உரிமை தனி வாக்காளருக்கு வழங்கப் படுதல்,**

  **அல்லது**

**ஒருவருக்கு ஒரே வாக்கு** என்ற முறையில் வாக்குகள் பதியப்பட்டு, தனித்தனி வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்த வாக்குகளின் எண்ணிக்கை அடிப்படையில் வரிசைப் படுத்தி அத் தொகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

தொகுதியில் தெரிவு செய்யவிருக்கும் அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்குக் குறைவான வாக்குகளை, வாக்காளர், பதிவாக்கியிருக்கும் நிலையில், அவ்வாக்காளரின் வாக்குகள் செல்லுபடியானதாகக் கணிக்கப்பட்டு எண்ணப்படும். ஆனால் உத்தேச அங்கத்தவர்கள் எண்ணிக்கைக்குக் கூடுதலான வாக்குகள் பதிவாகியிருந்தால் அவ்வாக்காளரின் வாக்குகள் நிராகரிக்கப்படும்.

---

## 6. வாக்காளர்கள்

### 6.1. வாக்காளர் தகுதி

6.1.1. தேர்தல் நாளன்று வாக்காளருக்கு **17 வயது பூர்த்தியாகி** இருத்தல் வேண்டும்.

6.1.2. பரம்பரை, திருமணம், தத்தெடுத்தல் என்பவற்றாலோ, வேறு ஏதும் எஞ்சிய பிரிவின் அடிப்படையிலோ வாக்குரிமை கோரி வரும் வாக்காளர் தலைமைதாங்கும் அலுவலர் கணிப்பில் தமிழீழப் பண்பாட்டுடன் இனங்காணப்படல் வேண்டும். பின்னைய பிரிவு ஓர் எஞ்சிய பிரிவாகக் கருதப்பட்டு தனித் தனியே ஆராயப்பட்ட தரவுகளின் அடிப்படையில் தகுதி தீர்மானிக்கப்படும்.

---

## 7. வேட்பாளர்கள்

### 7.1. வேட்பாளர்களின் தகுதி

7.1.1. மேலே குறிப்பிட்டுள்ள அடிப்படையில் ஒரு வாக்காளராகத் தகுதி பெற்றிருப்பதுடன்:

7.1.2. வேட்பு மனு தாக்கல் செய்பவர், அந்த நாட்டின் வதிவுரிமை பெற்றவராக இருக்கவேண்டும். அவர், தேர்தலுக்கு நிற்கும் மாவட்டத்தில் **வதிப்பவராக இருத்தலே அதிசிறந்த நிலையாகும்**. அதே மாவட்டத்தில் **வதியாதவராக** இருக்கும் நிலையில், அப் **பிராந்தியத்திலாவது வதிபவராக** இருக்கவேண்டும். குறித்த அப் **பிராந்தியத்தில் வசிப்பவர் எவரும் வேட்பாளராக முன்வராத நிலையில்** அந்நாட்டின் எப் **பிராந்தியத்திலாவது வசிப்பவரிடமிருந்து வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்படலாம்.**

**7.1.3.** அவர், நா.க.த.அ தேர்தல் ஆணையத்திலோ, நாட்டுத் தேர்தல் ஆணையத்திலோ பதவி வகிப்பவராகவோ அல்லது நா.க.த. அரசாங்கத்தின் தேர்தல் நிர்வாகத்துடன் எவ்வழியிலேனும் தொடர்புடையவராகவோ இருத்தலாகாது.

**7.1.4.** அவர் இலாபத்துக்காகவோ, இலாப நோக்குடனோ குற்றவியல் தவறு செய்தார் என எந்த நீதிமன்றத்தாலும், தண்டிக்கப்படாதவராய் இருத்தல் வேண்டும். அல்லது போட்டிக்காலத்தில் குற்றப் பதிவேட்டிலிருந்து பெயர் நீக்கப் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

**7.1.5.** அவர் தமிழ்ஈழ மக்களின் நலன்களுக்கு மாறாகவுள்ள வேற்று நாடுகளில் சேவை ஆற்றுபவராகவோ அல்லது அந்த நாட்டிலிருந்து பொருளாதார நன்மை ஏதும் அடையாதவராய் இருத்தல் வேண்டும்.

---

### 7.2. வைப்புப் பணம்

வேட்பாளர்கள் தமது வேட்பு மனு சமர்ப்பிக்கும்போது, (பதிவுக்கட்டணமாக) செலுத்த வேண்டிய வைப்புப் பணத்தின் தொகையை அந்தந்த நாட்டுத் தேர்தல் ஆணையம் நா.க.த.அ தேர்தல் ஆணையத்துடன் கலந்தாலோசித்து முடிவு செய்யும்.

---

### 7.3. வேட்பு மனு தாக்கல்

நா.க.த.அ அரசவைத் தேர்தலுக்கான வேட்பு மனு சமர்ப்பித்தல் தொடர்பான விசாரணைகள் அந்நாட்டுத் தேர்தல் ஆணையாளரிடம் மேற்கொள்ளப்பட வேண்டும். வேட்பு மனுக்களைப் பரிசீலிப்பதுடன் தேர்தல் நாளன்று வாக்களிப்பு நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதற்குமான பொறுப்புக்களைத் தேர்தல் ஆணைய அங்கத்தவர்களிடம் ஒப்படைக்கும் உரிமை ஆணையாளருக்கு உண்டு.

பத்திரிகைகளிலோ தேர்தல் ஆணையத்தின் வலையத்தளத்திலோ வேறு பொது ஊடகத்திலோ அறிவித்தபடி குறிக்கப்பட்ட நேரங்களிலும், குறிக்கப்பட்ட இறுதி நாளுக்கு முன்னரும் நியமிக்கப்பட்ட இடத்திலும் வேட்பு மனு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

வேட்பு மனு தாக்கல் செய்யவேண்டிய இறுதி நாளுக்கு முன்னர், தேர்தல் ஆணையாளரால் குறிக்கப்பட்ட ஒரு வங்கிக்கணக்கில், வங்கி வரைவோலை மூலம், மீளப்பெற முடியாத (பதிவுக்கட்டணமான) இவ்வைப்புப் பணம் வேட்பாளரால் செலுத்தப்பட வேண்டும். வேட்பாளருக்கு அதற்குரிய பற்றுச்சீட்டு வழங்கப்படும். வேட்பாளர், ஆணையாளருடன் தொடர்பு கொள்ளும் வேளைகளில் குறித்த பற்றுச்சீட்டில் உள்ள அடையாள எண்ணைக் (reference) குறிக்கப்பட வேண்டும்.

---

### 7.4. வேட்பு மனு மீளப்பெறல்

வேட்பாளர்கள் குறிப்பிட்ட நாளுக்குப் பின்னர் வேட்பிலிருந்து விலகுமிடத்து, செலுத்தப்பட்ட வைப்புப் பணத்தை முற்றாக இழப்பார். ஆயினும் குறித்த இறுதி நாளுக்கு இரு நாட்களுக்குள் விலகுவோருக்கு, வைப்புப் பணத்தில் 30% நிர்வாகச் செலவுக்காகப் பிடிக்கப்பட்டு, மிகுதி 70% மீளளிக்கப்படும்.

---

### 7.5. வேட்பு மனு ஏற்பு உறுதிப்படுத்தப்படல்

வேட்பு மனு, வேட்பாளர் தகுதி விதிகளுக்கு அமைவாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்குமிடத்து, ஆணையாளர் அல்லது அவரின் ஆணை பெற்ற தேர்தல் ஆணைய அலுவலர், வேட்பு மனு ஏற்றுக் கொண்டதை, வேட்பாளருக்கு எழுத்து மூலம் உறுதி செய்வார்.

வேட்பாளர் தகுதி தொடர்பான விடயத்தில் எழும் வினாக்களுக்கு உரிய விளக்கங்களைக் கூறித் தெளிவுபடுத்தும் முகமாக வேட்பாளரை ஆணையாளரால் நேரில் அழைக்கலாம்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பாளர் பட்டியல், வேட்பு மனு கோரப்பட்ட வேளையில் குறிப்பிடப்பட்ட காலத்தில், வலையத்தளத்திலோ அல்லது பத்திரிகைகளிலோ வெளியாகும்.

---

### 7.6. வேட்பாளர் தகுதியின்மை

வேட்பாளர் ஒருவர், தகுதி விதிகளின் அடிப்படையில் அவரது தகுதியின்மை அத்தாட்சிப் படுத்தப்படும் வேளையில் அவரது வேட்பு மனு செல்லுபடியாகாது, அல்லது ஆணையாளர் திருப்திக்குத், தவறான தரவுகள் வழங்கப்பட்டது உறுதிப்படுத்தப்படுமிடத்து, வேட்பாளர் மனு செல்லுபடியாகாது.

---

## 8. தேர்தல் நாள் முன்னேற்பாடு

தேர்தலுக்கு முன்னேற்பாடு செய்யவும், தேர்தல் நாளன்று செய்யவேண்டிய அனைத்து நடவடிக்கைகளுக்கும் தேர்தல் ஆணையம் பொறுப்பாக இருக்கும்.

தேர்தலுக்கு **முன் ஏற்பாடுகளைக் கவனிக்கவும்,** தேர்தல் நாளன்று பல்வேறு பணிகளில் சேவையாற்றுதற்குத் தேவையான தகுதிவாய்ந்த தேர்தல் அலுவலர்களையும் நிர்வாகப் பணியாளர்களையும் தேர்தல் ஆணையாளர் நியமிப்பார். கொடுக்கப்படும் பணிகளைச் செவ்வனே செய்தற்குத் தகுந்த ஆற்றல் வாய்ந்த 17 வயதுக்கு மேற்பட்ட எவரும், தேர்தல் அலுவலராக நியமிக்கப்படலாம்.

அலுவலர்கள் தமக்கு வழங்கப்படும் பணிகளைத் தெளிவாக அறிந்து தேர்ச்சி பெறும் பொருட்டு **பயிற்சி வகுப்புக்களை** ஒழுங்கு செய்து நடத்துவது தேர்தல் ஆணையாளரின் பொறுப்பாகும்.

நா.க.த.அ தேர்தல் ஆணையத்தால் பணிக்கப்பட்டவாறு **அலுவலர்கள் நடுநிலையாகவும் அந்தரங்கத்தைப் பேணியும் பணியாற்றுவதை எழுத்துமூலம் உறுதிப்படுத்திக் கொள்ளுதல்** தேர்தல் ஆணையாளரின் பொறுப்பாகும்.

வாக்குச் சீட்டில் பெயர் இடம்பெற்றிருந்தால் அப்பெயருக்குரியவர் தேர்தல் அலுவலராகப் பணியாற்ற முடியாது.

---

### 8.1. தேர்தலுக்குத் தேவையான பொருட்கள்

வாக்குச் சீட்டுக்களை அச்சிடுதற்கும், தேர்தல் நாளன்று தேவையான சகல எழுதுசாதனங்களை வழங்குதற்கும் தேர்தல் ஆணையம் பொறுப்பாக இருக்கும்.

---

## 9. வாக்களித்தல்

### 9.1. வாக்களிப்பு நிலையங்கள்

நேர்மையான தேர்தல் நடைபெறுவதைப் பாதிக்கக்கூடிய சகல காரணிகளையும் கருத்திற் கொண்டு தேர்தல் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் தாபிக்கப்பட வேண்டிய வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கையைத் தேர்தல் ஆணையம் தீர்மானிக்கும்.

வாக்களிப்பு நாளுக்கு ஆகக் குறைந்தது ஒரு கிழமைக்கு முன்னர் தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டிருக்கும் வாக்குச் சாவடி உரிய காரணங்களின் அடிப்படையில் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என ஒரு தேர்தல் மாவடடத்தில் உள்ள ஒரு வேட்பாளரால் அல்லது ஒரு வாக்காளரால் தேர்தல் ஆணையத்தைக் கோரும் சந்தர்ப்பத்தில் வாக்களிப்பபுக்கு ஆகக் குறைந்தது 48 மணித்தியாலங்ளுக்கு முன்னராவது வாக்குச் சாவடி இடமாற்றம் செய்யப்படலாம். இது சம்பந்தமாகத் தேர்தல் ஆணையம் எடுக்கும் தீர்மானமே முடிவானதாக இருக்கும்

வாக்குச் சாவடி நிலையம் திடீரென இரத்தாவது அல்லது எதிர்பாராத செலவு அதிகரிப்பு, போதிய தொண்டர் ஆதரவு இன்மை, தொண்டர்கள் பற்றாக்குறை போன்ற வேறு பல காரணங்களுக்காகவும் வாக்காளர்களுக்குப் போதிய அவகாசம்

கொடுக்கப்பட்டு தேர்தல் ஆணையத்தால் வாக்குச் சாவடி இட மாற்றம் செய்யப்படலாம்.

அவ்வாறு வாக்குச்சாவடி இட மாற்றம் செய்யும் பட்சத்தில் அத்தகவல் வேட்பாளர்களுக்கும் வாக்காளர்களுக்கும் உடனடியாகத் தெரிவிக்கப்படும். வாக்குச் சாவடிகளை ஒழுங்கு செய்து நடாத்துவதற்கு ஏற்படும் சகல செலவுகளையும் தேர்தல் ஆணையம் பொறுப்பேற்கும்.

---

## 9.2. வாக்குச் சாவடி உபகரணங்கள்

தேர்தல் நாளன்று, வாக்களிப்புச் செவ்வனே நடைபெறுதற்குத் தேவையான வாக்குச் சீட்டுப்பெட்டி, காகிதாதி எழுதுசாதனங்கள், மை முதலிய பொருட்களை வழங்குவது சாவடிக்குத் தலைமைதாங்கும் அலுவலரின் பொறுப்பாகும்.

மாவட்டத் தலைமைத் தேர்தல் அலுவலர், தேவைக்கேற்ப, தேர்தல் ஆணையத்துடன் இணைந்து, தமது மாவட்டத்தில் உள்ள சாவடிகளில் தலைமைதாங்கும் அலுவலர்களுக்கு வேண்டப்படும் உதவிகளை வழங்குவார்.

சாவடியில் தலைமைதாங்கும் அலுவலர் தமது வாக்குச் சாவடி முகாமை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருப்பார்.

தலைமை தாங்கும் அலுவலர், வாக்களிப்புத் தொடங்குமுன், வாக்குப் பதிவுக்கு தேவையான உபகரணங்கள் அனைத்தும் உள்ளனவா, பணியாளர்கள் அனைவரும் வந்திருக்கிறார்களா என்பவற்றை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

---

## 9.3. வாக்குப் பதிவு முறை

வாக்களிப்பு நாளின் காலநிலையையும் கணக்கிலெடுத்து காலையில் குறிப்பிட்ட நேரத்தில் ஆரம்பித்து **தொடற்சியாக 10 மணி நேரம்** வாக்குப் பதிவு இடம் பெறும்.

தேர்தல் ஒழுங்காக நடைபெறுவதற்குத் தேர்தல் ஆணையாளரே பொறுப்பாக இருப்பார். தேர்தல் நாளன்று சகல தேர்தல் **அலுவலர்களின் சமூகமளிப்பும்** அவர்கள் ஒவ்வொருவரும் தமது அன்றைய **கடமைகளில் பரிச்சயமானவர்களாக உள்ளார்களா** என்பதை உறுதிப் படுத்தும் பொறுப்பும் அவருடையதாகும்.

**தலைமை தாங்கும் அலுவலர்** தேர்தல் ஆணையத்தால் வகுக்கப்பெற்ற விதிமுறைகளைக் கடைப்பிடித்து வாக்குப் பதிவு ஆரம்பித்த வேளையிலிருந்து வாக்கு எண்ணும் அலுவலர்களின் பொறுப்பில் வாக்குச்சீட்டுப் பெட்டிகள் சாவடியிலோ அல்லது மத்திய வாக்கெண்ணும் நிலையத்தலோ ஒப்படைக்கப்படும் வரை வாக்குச் சீட்டுப் பெட்டிகளின் பந்தோபஸ்த்திலும் தேர்தலின் கண்ணியத்திலும் கவனஞ்செலுத்தல் வேண்டும்.

வாக்காளரை வாக்களிக்க அனுமதிக்கும் முன்னர் அவரது ஆளடையாளம், வயது, வதிவிடம் என்பவற்றின் அடிப்படையில் தகுதியை நிர்ணயிப்பது **வாக்குச் சாவடி அலுவலரின் பொறுப்பாகும். வாக்காளர் தகுதிபற்றி எழும் பிணக்குகளுக்கு தலைமை தாங்கும் அலுவலரே தீர்மானம் எடுப்பதுடன் அதுவே கட்டுப்படுத்தும் இறுதி முடிவாகவும் அமையும்**.

வாக்குச் சாவடி அலுவலர் வாக்குச் சீட்டை வாக்காளருக்கு வழங்கும் அதே வேளையில் வாக்காளரின் இடதுகைச் சுட்டுவிரலில் அழியா மை பூசப்படும். மறைவடக்கம் (confidentiality) பேணப்படும் பொருட்டு வாக்குப் பதிவுக்கூடத்தில் (cubicle) எவரும் இல்லாதபோதே வாக்காளருக்கு வாக்குச் சீட்டைக் கொடுக்கும்படி வாக்குச்சாவடி அலுவலருக்குத் தலைமை தாங்கும் அலுவலர் கூறிவைக்கலாம்.

வாக்களார் ஒருவர், வாக்குச் சீட்டை எவ்விதத்திலாவது சேதப்படுத்திய வேளையில் அதைத் திருப்பிக்கொடுத்து அலுவலரிடம் மாற்றுச் சீட்டைப் பெறலாம். இச்சலுகை மூன்று தடவைக்கு மேல் வளங்கப்பட மாட்டாது. தலைமை தாங்கும் அலுவலர் அவ்வாறு சேதப்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டைச் செல்லுபடியாகாது என ஒப்பமிட்டு உறுதி செய்யவேண்டும். அத்துடன் தலைமை தாங்கும் அலுவலர் செல்லுபடியாகாத வாக்குச் சீட்டுக்கள் அனைத்தையும் ஒன்றாக இணைத்துப் 'சீல்' செய்து, பயன்படுத்தப்படாத வாக்குச் சீட்டுக்களுடன் வைத்திருப்பார். அவற்றை, வாக்களிப்பின் இறுதியில், வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கையைச் சமன் செய்யும்போது, (செல்லுபடியான வாக்குச்சீட்டுகள், பயன்படுத்தப்படாத வாக்குச் சீட்டுக்கள், செல்லுபடியற்ற சேதப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் என) மொத்த வாக்குகளைக் கணக்கிடுவதற்காக உறையிலிட்டு வைத்திருப்பார்.

ஒரு வாக்காளர், தமது வாக்குச்சீட்டில் வாக்குப் பதிவு செய்து முடிந்ததும் சீட்டை மடித்துத் தானாகவே அதனை வாக்குப் பெட்டியில் சேர்க்க வேண்டும்.

இடது கைச்சுட்டு விரலில் அடையாளம் இடப்பட்ட எந்த வாக்காளரும் வேறொரு வாக்காளருக்கு உதவும் பொருட்டு வந்தாலன்றி, வாக்குச் சாவடிக்குள் மீண்டும் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்.

---

### 9.4 உதவியுடன் வாக்குப் பதிதல்

வாக்காளர் ஒருவர் தனது வாக்கைப் பதிவு செய்வதற்கு உதவியை நாடலாம். அவரே அழைத்து வந்தவரே அவ்வாறு உதவலாம் அல்லது வாக்குச் சாவடி அலுவலரால் நியமிக்கப் பட்ட அலுவலர் உதவலாம். வாக்குச் சாவடி அலுவலர் வாக்குச் சீட்டைக் கையளிக்கு முன் வாக்காளருக்கும், உதவியாளருக்கும், வாக்களிக்கும் முறையைத் தெளிவுபடுத்தி, நேர்மையான அந்தரங்க வாக்களிப்பைப் பாதுகாப்பதற்கான அறிவுரையையும் வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்.

---

## 9.5 வாக்குச்சீட்டின் வடிவமைப்பு

ஒவ்வொரு வாக்காளருக்கும் குறித்த தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் சகல வேட்பாளர்களினதும் பெயர்கள் அடங்கிய வாக்குச் சீட்டு ஒன்று வழங்கப்படும்.

வாக்குச்சீட்டில் வேட்பாளர்களின் பெயர்கள், குடும்பப் பெயரின் அகரமுதலி அடிப்படையில் வரிசைப் படுத்தியிருக்கும். ஒரே குடும்பப் பெயரைக் கொணடு ஒன்றுக்கு மேற்பட்டோர் இருப்பின், இப் பிரச்சனையை பொது அறிவுடன் அணுகி அவர்களின் நடுப்பெயர்களின் அடிப்படையில் பெயர் இடம்பெறுவது நிர்ணயிக்கப்படும்

வாக்காளர் ஒருவர், ஒரு வாக்குக்கே உரிமையுடையவராய்த் தாம் தெரிவுசெய்யும் வேட்பாளரின் பெயருக்கெதிரே **"X"** என்று குறியிடுவார். ஆயினும் பல் உறுப்பினர் தேர்தல் தொகுதியில், **அங்கு தெரிவுசெய்யப்பட இருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் படி அத்தனை வாக்குகளை வழங்கும் உரிமை, பல அங்கத்துவத் தொகுதி வாக்காளர்களுக்கு இருக்கும்.**

மின்னியல் முறையில் வாக்குப் பதிவாகும் சந்தர்ப்பத்தில் தெரிவை அல்லது எண்ணத்தை தெளிவாகச் சுட்டும் எத்தகைய அடையாளமும் ஒரு வாக்காக ஏற்கப்பட்டு எண்ணப்படும். இது சம்பந்தமாகக் கருத்து வேறுபாடு ஏற்படின் **வாக்குகளை எண்ணுகின்ற அலுவலரே** தீர்ப்பளிப்பதோடு அவரின் தீர்ப்பே முடிவானதாகவும் அமையும்

வாக்குச்சீட்டில் வாக்காளரின் குறியீடு தெளிவின்றி இருக்குமிடத்தும், ஒரு குறிப்பிட்ட தேர்தல் தொகுதியில் இருந்து தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமான பெயர்களுக்கெதிரே குறிகள் போடப்பட்டிருந்தாலோ அல்லது விசமத்தனமாக வாக்குசிசழசீட்டு நாசப் படுத்தப்பட்டிருந்தாலும், அத்தகைய சீட்டுகள் கணக்கிலெடுக்கப்படாததுடன், நிராகரிக்கப்படும்.

---

## 9.6 வாக்குச்சாவடி முகவர்கள்

**ஒவ்வொரு வேட்பாளருக்கும், வாக்குச் சாவடியில் ஒரு முகவரை நிறுத்தும்** உரிமை இருப்பதால், அவர் வாக்களிப்புக்கு ஒருகிழமைக்கு முன்னரே தலைமைத் தேர்தல் அலுவலரிடம் தமது முகவரின் பெயரைப் பதிவுசெய்திருத்தல் வேண்டும்.

வாக்குச் சாவடி முகவர், எவ்வேட்பாளரையாவது அடையாளப்படுத்தும் முறையில் ஏதாவது அடையாளம், சின்னம், பட்டி முதலியவற்றை அணிவது தடைசெய்யப்பட்டிருக்கும்.

வாக்குச் சாவடிக்குள், வாக்குச்சாவடி முகவரின் பணியானது, யாராவது வாக்காளரின் வயது, வதிவிடம் சம்பந்தப்பட்ட ஆட்சேபனைக்கு மட்டுப்படுத்தப் பட்டிருப்பதோடு

வாக்குச்சாவடி அலுவலர் அது சம்பந்தமாக அளிக்கும் தீர்ப்பிற்குக் கட்டுப்பட்டதாகவும் இருக்கும்.

வாக்குச்சாவடிக்குள் இருக்கும்போது வாக்குச்சாவடி முகவர் தொடர்புச் சாதனம் ஏதும் பயன்படுத்துவது விலக்கப்பட்டுள்ளதுடன் வாக்காளர் எவருடனும் தொடர்புகொள்ள அனுமதிக்கப்படமாட்டார். வாக்குச்சாவடி முகவர் தமது ஆட்சேபனைகளை **வாக்குச்சாவடி பணியாளர்களின் கவனத்திற்கு மட்டுமே கொண்டுவரலாம்** என்பதுடன், அவர் எழுப்பும் விசனங்களுக்கு வாக்குச்சாவடி அலுவலரின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளவும் வேண்டும்.

---

## 10. வாக்குச்சீட்டுக்களை எண்ணுதல்.

வாக்குகள் தேர்தல் ஆணையம் வழங்கும் நடைமுறை விதிகளுக்கேற்ப எண்ணப்படும். **தனியான வாக்குச் சாவடியில் வாக்குகளை எண்ணுதல், ஒவ்வொரு வேட்பாளரின் மொத்த வாக்கு எண்ணிக்கையை கணிக்கு முகமாகச் சகல வாக்குச்சாவடிகளிலிருந்தும் பெறப்பட்ட தொகையை ஒன்று சேர்த்துக் கணக்கிடுதல் அல்லது மையப்படுத்தப்பட்ட ஓர் இடத்தில் வாக்குகளை எண்ணுதல்** என நடைமுறைகள் வேறுபடலாம். இவற்றுள் ஏற்ற ஒரு நடைமுறையைத் தெரிவுசெய்வது பெரும்பாலும் பந்தோபஸ்த்து காரணிகளிலேயே தங்கியுள்ளது. இந் நடைமுறைகளின் கண்ணியத்தைச் சம்பந்தப்பட்ட தேர்தல் ஆணையமே உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

வாக்குகள் எண்ணப்படுவதை அவதானித்தற்கு வேட்பாளருக்கு ஒருமுகவர் அனுமதிக்கப்படுவாராயினும், எண்ணுதல் நடைபெறுவதை அல்லது அதன் கண்ணியத்தைப் பாதிக்கும் வகையில் தகாதநடை ஏதாவது அவதானிக்கப் பட்டால் **குறிப்பிட்ட முகவர்களை வெளியேற்றும் அதிகாரம் எண்ணுகின்ற அலுவலருக்கு உண்டு.**

**வாக்காளர் ஒருவர், வாக்களிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையின் 4 விழுக்காடுகளுக்குக் குறைவான வாக்கு வித்தியாசத்தில் தோற்கும் சந்தர்ப்பத்தில், தன்னிச்சையாகவே வாக்கு மீளாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.**

இரு வேட்பாளர்களின் வாக்கு **எண்ணிக்கை சமனாக இருக்கும்** அரிதான, ஆனால் பிரதிநிதித் தேர்வில் குறித்த தாக்கத்தை ஏற்படுத்தும் அச் சந்தர்ப்பத்தில், குறித்த தேர்தல் ஆணையாளர் அவ்விரு வேட்பாளர்களினதும் இரு தேர்தல் ஆணைய அங்கத்தவர்களதும் முன்னிலையில் நாணயச் சுழற்சி மூலம் வெற்றியாளரைத் தேர்ந்தெடுக்கப்படுவார். **தேர்தலுக்குப் பொறுப்பாயுள்ள தேர்தல் ஆணையாளரே தேர்தல் பெறுபேறுகளின் கண்ணியத்திற்குப் பொறுப்பேற்பார்.**

---

## 11. பாதுகாப்பு

சனநாயகமுறைகள் அனைத்திலும், நேர்மையான முறையில் வாக்குப்பதிவு நடந்ததை உறுதிப்படுத்தும் முகமாக, **பாதுகாவல் தொழிலில் துறைசார்ந்த, சுயாதீனமாக இயங்கும் நிறுவனமொன்றின் சேவையை நாடும் சுதந்திரம் தேர்தல் ஆணையத்துக்கு உண்டு.**

இச்சேவை, வாக்குப்பெட்டிகளை வாக்குகள் எண்ணும் நிலையத்துக்கு கொண்டு செல்லும் போதும், அதன் பின் எண்ணுதல் நடைபெற்று முடிவுகளைத் தேர்தல் பொறுப்பு அதிகாரி (Regurning Officer) அறிவிக்கும் வரையும் இன்றியமையாததாக இருக்கும்.

---

## 12. முறையீடுகளைத் தீர்த்து வைத்தல்.

வாக்குப் பதிவாகும் காலம் முதல் பெறுபேறு அறிவிக்கப்படும் வரையுள்ள காலப்பகுதியில் வேட்பாளர்கள், அவர் முகவர்கள், அல்லது வாக்காளர் செய்யும் முறைப்பாடுகளை ஆராய்ந்து **தீர்த்துவைப்பதற்கென்றே அதிகாரம் வழங்கப் பெற்ற தேர்தல் ஆணை அலுவலர் தெளிவாக விளக்கப்பட்டுள்ள விதிமுறைகளின் துணை கொண்டு செவ்வனே தீர்த்து வைப்பார்.**

இம்முறையீடுகள் உடனுக்குடனும் நியாயமாகவும் உகந்த முறையிலும் முழுத்தேர்தல் நடைமுறைகளுக்குப் பாதிப்பு அற்ற வகையிலும் தீர்க்கப்படவேண்டும். **இத்தீர்மானம் இறுதியானதாய் அமைவதுடன் மீளாய்வுக்கும் இடமளிக்க மாட்டாது.**

---

### 12.1. ஒழுக்க முறை மீறல்

வேட்பாளர் எவராவது விதிகளை மீறினால் அதை எழுத்து மூலம் தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டுவரவேண்டும். சான்றுடன் கொண்டு வரப்பட்டிருக்கும் முறையீடு, குறித்த வேட்பாளருக்கு பதில் அளிக்கச் சந்தரப்பம் வழங்கிய பின், உரிய முறையில் விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்படும்.

ஒழுங்கு மீறல் சம்பந்தமான முறைப்பாடு, தேவைப்படின் **தேர்தல் ஆணைய அங்கத்தவர் ஒருவரால் அல்லது ஆணையாளரால்,** தேவைக்கேற்ப விசாரணைக்கு உட்படுத்தப் படலாம்.

---

### 12.2. விதிமுறை மீறலின் பலாபலன்கள்

12.2.1 ஒரு வேட்பாளரால் அல்லது அவரது பிரசாரகர்களால் ஒழுங்கு முறைகள், உடன்படிக்கைகள், மீறப்பட்டன என்றோ அல்லது அவர்களால் பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன என்றோ அல்லது ஆணையத்தின் பணிப்புரைகளைக் கடைப்பிடிக்கத் தவறினார் என்றோ தேர்தல் ஆணையம் உறுதிப்படுத்திக்கொண்டால் அவற்றை நிவர்த்தி செய்யும் முகமாக குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கையை உடனே எடுக்குமாறு அவருக்கோ, அவரது தேர்தல் பிரசாரகருக்கோ எடுத்துரைத்து அதன்படி கட்டுப்பட்டு நடக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

- வேட்பாளரின் வைப்புப் பணம் முழுவதும் அல்லது அதில் ஓர் பகுதியை இழக்கும் சாத்தியம் உண்டென அறிவித்தல்.

- குற்றத்துக்குப் பிடிபடும் தொகையை ஈடு செய்து வைப்புப் பணத்தை உரியமுறையில் மேவும்படி பணித்தல்.
- குற்றச் செயலுக்கு தேர்தல் ஆணையம் எடுத்த நடவடிக்கையையும் அதற்கான காரணங்களையும் பொதுமக்களுக்குத் தெரிவித்தல்.
- பணிமுறைக் கண்டனம் அளித்தல்.
- வேட்பாளரின் தகுதி நீக்கம் பெற்ற அடிப்படையில் அவர் பெயரை வாக்குச் சீட்டிலிருந்து நீக்குமாறு ஆணையாளரிடம் கோருதல்.

**தேர்தல் ஆணையத்தின் தீர்மானம் வேட்பாளரையோ அவரது பிரச்சாரத்தையோ கட்டுப்படுத்தும் இறுதி முடிவாக இருக்கும்.**

---

12.2.2 தேர்தல் அலுவலர் ஒருவர் ஒழுங்கு விதிமுறைகளை மீறினார் என்றோ அல்லது தேர்தலின் கண்ணியத்திற்கு இடையூறு ஏற்படும் வகையில் ஏதாவது முறை தவறி நடந்தார் என்றோ அல்லது முறை கேட்டில் ஈடுபட்டிருந்தார் என்றோ தேர்தல் ஆணையம் தீர்மானித்தால் பின்வரும் நடவடிக்கைகளில் குற்றத்துக்கேற்ப ஒன்று அல்லது பல விதிக்கப்படும்.

- குறிப்பிட்ட நிவர்த்தி நடவடிக்கையை உடனடியாக எடுக்குமாறு அலுவலருக்குப் பணித்தல்,
- கட்டுப்பாட்டு விதியை மீறியதால் ஏற்பட்ட செலவை ஈடு செய்யுமாறு அலுவலரை வேண்டுதல்,

- அலுவலர் தேர்தல் தொடர்பான எந்த நிகழ்ச்சியிலும் மேற்கொண்டு பங்குபற்றுதற்குத் தடை விதித்தல்,
- பணிமுறைக் கண்டனம் அளித்தல்,
- தேர்தல் தொடர்பான சகல பொறுப்புகறிலும் கடமைகளிலும் இருந்து அலுவலரை விலக்கிப் பதிலாக வேறு ஒருவரை நியமித்தல்,
- எந்த வேட்பாளர் சார்பாகவும் அலுவலர் மேற்கொண்டு செயலாற்றுதற்குத் தடை விதித்தல்
- அலுவலர் எடுத்திருக்கக்கூடிய தீர்மானங்களை மீள ஆராய்ந்து அவற்றுக்குப் பரிகாரமான நடவடிக்கைகளை எடுத்தல்,
- பிரச்சினைகளையும் தேர்தல் ஆணையம் எடுத்த தீர்மானங்களையும் பொதுமக்களுக்கு அறியத்தருதல்.

12.2.3 வாக்காளர் ஒருவர் கட்டுப்பாட்டு விதிகளை மீறி அல்லது வாக்களிப்பின் கண்ணியத்திற்குப் பாதகமான முறையில் நடந்துகொண்டார் என்று தேர்தல் ஆணையம் உறுதிப்படுத்துமாயின் அவருக்கு பின்வரும் நடவடிக்கைகளில் ஒன்று அல்லது பல நடவடிக்கைகளை, குற்றங்களுக்கு ஏற்றவாறு எடுக்கப்படலாம்.

- நிவர்த்தியாக, குறிப்பிட்ட நடவடிக்கையை எடுக்குமாறு வாக்காளர் பணிக்கப்படலாம்,
- முறைகேடு சம்பந்தமாக ஆணையத்திற்கு செலவினம் ஏதாவது ஏற்பட்டிருந்தால் குறித்த அத் தொகையை ஈடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளலாம்,
- இந்த வாக்காளர் வாக்களிப்பதற்குத் தடை விதிப்பதோடு யாராவது வேட்பாளருக்கு முகவராகப் பணியாற்றுவது உள்ளிட்ட தேர்தல் தொடர்பான எந்தக் கருமத்திலும் பங்கு கொள்வதற்குத் தடை விதிக்கலாம்.

---

### 12.2.4 பின் இணைப்பு

**தேர்தல் ஆணையம் வாக்குச் சீட்டுகளை வடிவமைத்தற்கும், தேவைக்கேற்ப தகவல்களைச் சேகரித்தற்கும், தகவல்களை வழங்குதற்கும் உரிய உரிமையைத் தனதாக்கிக் கொண்டிருக்கும்.**

தேர்தல் ஆணையம், இப் பொதுவழிகாட்டி விதிகளுடன் பல்வேறு அட்டவணைகளைப் பின் இணைப்பாக சேர்த்துக்கொள்ளும் உரிமை கொண்டுள்ளது. அத்துடன் அவற்றின் உள்ளடக்கத்தை, அதன் நேர்மைக்கும் கண்ணியத்திற்கும் பங்கம் ஏற்படாத வகையில்

மீளப் பெறவும் திருத்தங்கள் செய்யவும் உரிமை கொண்டுள்ளது. அவ் அட்டவணைகள் மேல் குறிப்பிடப்படும் அம்சங்களை மேவியதாக இருக்கும்.

- இந்த வழிகாட்டி ஆவணத்திலுள்ள சொற்கள், பதங்கள் ஆகியவற்றின் **பொருள் அல்லது விளக்கம்,**
- நிறைவேற்று **கால எல்லைகள் வகுத்தல்**,
- பொதுக் **கருத்துக் களம்** இருப்பின் அதற்கான **விதிகளை நிறுவுதல்,**
- ஏற்புடைய **கொடுப்பனவு முறைகளைத் ஏற்படுத்துதல்**,
- வாக்குச்சாவடி அலுவலர்கள், அனைத்துத் தேர்தல் அலுவலர்கள் ஆகியோரின் **கடமைகளைத் தீர்மானித்தல்**.
- **வேட்பாளர்கள், அவர்களின் முகவர்கள், பிரசாரகர்கள், வாக்குப் பதிவு கண்காணிப்பாளர்கள்** ஆகியோரின் நடவடிக்கைகளைக் கண்காணித்தல்.
- **வாக்குச்சாவடியின்** அனைத்து நடவடிக்கைகள் தொடர்பான ஒழுங்குமுறைகள்,
- ஒரு வாக்காளருக்கு பதிலாக **இன்னொருவர் வாக்களிப்பது** (Proxies), பதிலாள் வாக்களிப்பதைக் கண்காணித்தல் தொடர்பான ஒழுங்குமுறைகள்,
- சீரான **வாக்குப்பதிவு,** வாக்குகள் அட்டவணைத் தயாரிப்பு, பதிவான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை முதலியன பற்றிய ஒழுங்குமுறைகள்,
- தேர்தல் தொடர்பான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்,
- தேர்தல் ஆணையத்தின் அதிகாரத்தைத் தேவைக்கேற்பத் தேர்தல் அலுவலர்களிடம் பகிர்ந்தளித்தல்.
- சீரான வாக்கெடுப்பு இடம்பெறுவதற்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டு நிர்வகித்தல்.

வாக்குப்பதிவு நேரங்களில் வேட்பாளர்கள், வாக்குப் பதிவுக் கண்காணிப்பாளர்கள், வாக்காளர்கள் தடையின்றி சாவடிக்குள் வந்து போவதற்குப் பொருத்தமான இடவசதியுடன் கூடிய வாக்குச்சாவடி அமைவிடம் சம்பந்தமாக ஒரே மாதிரியான ஒழுங்கு முறைகளைச் அனைத்து நாட்டுத் தேர்தல் ஆணையங்களும் கடைப்பிடித்தல் வேண்டும்.

- எதிர்நோக்கும் வாக்காளர் தொகையின் அடிப்படையில் போதிய வாகனத் தரிப்பிடம்,
- அலுவலர்களுக்கும் வாக்காளர்களுக்கும் போதுமான கழிவறை வசதிகள்,
- ஊனமுற்ற வாக்காளர்களின் வசதிகளை உறுதிப்படுத்தல்,
- 150 வாக்காளர்களுக்கு ஒரு மேசை என்ற அடிப்படையில் மேசைகளைச் சாவடிகளில் வைத்தற்குப் போதிய இடவசதி உறுதிப் படுத்தல்,

- 150 வாக்காளர்களுக்கு ஒரு வாக்கு ஒதுக்கம் (Voting Enclosures) என்ற அடிப்படையில் வாக்குப் பதிவு ஒதுக்கங்களின் எண்ணிக்கை நிர்ணயித்தல்,
- தேர்தல் ஆணையத்துடன் வாக்குச்சாவடி அலுவலர்கள் 24 மணி நேரமும் தொடர்பு கொள்வதற்கு வசதியான தொலைத்தொடர்பு சாதனம், நிலவழித் தொலைபேசி, விரும்பத்தக்கது,
- சமாளிக்கத் தக்க செலவுகள்.

---

### 12.2.5 ஆள் அடையாளம், வதிவிடம், வயது ஆகியவற்றிற்கு ஆதாரம்

அந்தந்த நாடுகளில் நடைமுறையில் உள்ள ஆள்அடையாள அட்டைகளை அடிப்படையாகக் கொண்டு ஆள் அடையாளம், வதிவிடம், வயது ஆகியவற்றை நிரூபிக்கும் ஏற்புடைய ஆவணங்களின் அட்டவணை ஒன்றினை அந்தந்த நாட்டு தேர்தல் ஆணையங்கள் தயாரிக்கவேண்டும். ஒழுங்கு முறைகளுக்குக் களங்கம் ஏற்படாத முறையில், பிணக்குகள், சவால்களை வகுக்கப்பெற்ற வழிமுறைகளின் துணைக் கொண்டு தலைமை அலுவலர் தீர்த்து வைப்பார்.

---

### 12.2.6 வேட்பாளர்கள் சாவடி அமைவிடங்களில் வாக்குக் கோரிப் பிரச்சாரம்

வாக்குச்சாவடி அமைவிடத்திற்கு வெளியே 300 அடி சுற்று எல்லைக்குள் வேட்பாளர்களின் அடையாள அட்டைகள், சின்னங்கள், பொத்தான்கள், மேற்சட்டைகள், தொப்பிகள் போன்ற வேட்பாளரை அடையாளப்படுத்தும் சின்னங்கள் எதுவும் அனுமதிக்கப்பட மாட்டா.

எனினும், வாக்கு ஆய்வாளர் அல்லாத வாக்காளர் எவரும் விரும்பினால், பிரசார விளம்பர உடை முதலியவற்றை தாம் அணிந்துவர அனுமதியுண்டு.

தலைமை தாங்கும் அலுவலரின் தற்காலிக நிர்வாகத்தில் அடங்கும் வாக்குச் சாவடியை அண்டிய பகுதிகளில் விளம்பரம் செய்ய அனுமதிப்பது வாக்காளர்களின் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்காததை உறுதிப்படுத்திய தலைமை அலுவலரின் விருப்புரிமையாக இருக்கும்.

மேலே குறிப்பிட்ட விடயத்தைக் கருத்திற் கொண்டு, வாக்களிப்புக்கு குந்தகம் விளைவிக்காத வகையில், வேட்பாளர்கள் விளம்பரம் செய்வதற்கான இடத்தை நியாயமான முறையில், பாரபட்சமின்றி பிரித்துக் கொடுப்பார்.

விளம்பரத்திற்கான இட ஒதுக்கீடு சம்பந்தமான பிரச்சார விசாரணைகளுக்கு, தலைமை தாங்கும் அலுவலர், இயன்ற அளவு தாமதமின்றிப் பதில் அளிப்பார்.

விளம்பரத்திற்கான ஒதுக்கீடு அல்லது விளம்பரங்களைப் நிறுவுதல் போன்ற விடயங்களில் ஏற்படும் பிணக்குகளைத் தலைமைதாங்கும் அலுவலரே தீர்த்து வைப்பதுடன் அத்தீர்ப்பே கட்டுப்படுத்தும் இறுதி முடிவாக இருக்கும்.

ஒவ்வொரு வேட்பாளரும் கீழே தரப்படும் விடயங்களுக்குத் தனிப்பட்ட முறையில் பொறுப்பாய் இருப்பார்:

- வேட்பாளர் அல்லது அவரது முகவர் வாக்குச்சாவடியில் விளம்பரச் சாதனங்களை நிறுவும் போது அல்லது அமைக்கும் பொழுது ஏற்படும் எவ்வகையான சேதத்திற்கும்,
- வேட்பாளர் விளம்பரம் சம்பந்தமான விதிமுறைகளை மதித்து செயல்படுவதை உறுதிப் படுத்தல்,
- வாக்குப் பதிவு நிறைவானதும் அல்லது காரணம் எதுவாகவிருப்பினும் வாக்குச்சாவடி அலுவலரின் பணிப்பிற்கிணங்க சகல விளம்பரங்களையும் அப்புறப்படுத்தல்.

---

### 12.2.7 தேர்தல் ஆணையங்களின் விதி தளர்த்தல் உரிமை

அனைத்து நாடுகளிலும், நா.க.த. அரசாங்கத்தின் தேர்தல் நிர்வாகத்தில், இக் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள விதி முறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், சில நாடுகளில் காணப்படக்கூடிய அசாதாரன நிலைமைகள் காரணமாக, அந்தந்த நாட்டுத் தேர்தல் ஆணையத்தால் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரண்படாத முறையில் அத்தியாவசியமெனக் கருதப்படும், சிலமாற்றங்களைக் கைக்கொள்ளும் உரிமை உண்டு.

---

### 12.2.8 தேர்தல் பிணக்குகள்

ஏதாவது முறைகேட்டின் காரணமாக நா.க.த.அ. தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடவோ, அல்லது பிரதிநிதியாகச் சேவையாற்றவோ ஒருவர் தகமை இழந்தவராகக் கருதப்படும் சந்தர்ப்பத்தில் தொடர்பான முறையீடு ஒன்று அதற்கான சான்றுகளுடன் **எழுத்து மூலம் நாடுசார் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்படலாம்.** குறிப்பிட்ட ஆணையாளர் முறையீடு கிடைக்கப் பெற்றதை முறையீட்டாளருக்கு உறுதிப்படுத்துவதோடு, அந்த முறைப்பாட்டை உரிய நடவடிக்கை மேற்கொள்ளுவதற்காகத் தேர்தல் ஆணையத்துக்கு வழிப்படுத்துவார்.

தேவை ஏற்படின் இந்த முறையீட்டை விசாரனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கக் கோரி முறையீட்டில் தொடர்புடைய, அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தகைமை உடைய மூவருக்கு குறையாத உறுப்பினரைக் கொண்ட சிறப்புக் குழு ஒன்றை அமைத்தற்குத், தேர்தல் ஆணையம் செயற்படலாம். நா.க.த.அ. தேர்தல் ஆணையம் நிவர்த்தி நடவடிக்கை மேற்கொண்டு எடுக்க வேண்டியிருப்பின் **இவ் விசாரணைக் குழுவின் அறிக்கையும் குறித்த நாடுசார் தேர்தல் ஆணையத்தின் பரிந்துரையும், நா.க.த.அ தேர்தல் ஆணையத்தின் தீர்வு நடவடிக்கைக்கு அடிப்படையாக அமையும்.**